# பத்திரிக்கை செய்தி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பிவ, மிபிவ கல்வி விடுதிளில் காலியாக உள்ள பகுதி நேர துய்மை பணியாளர் தொகுப்பூதியம் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள பகுதி நேர துாய்மை பணியாளர் தொகுப்பூதியம், மாதம் ரூ.3,000/- பணியிடங்கள் **ஆண் 6, பெண் 8** நேர்காணல் மூலம் இனசுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது. அரசு விதிகளின்படி முன்னுரிமை பெற்றவர், முன்னுரிமை பெறாதவர் அடிப்படையிலும் நிரப்பப்படவுள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30.05.2022 மாலை 5 மணிவரையிலும் வரவேற்கப்படுகின்றன. தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு 01.07.2022 தேதியன்று SC/ST – 18 முதல் 35, BC, BC(Muslim) , MBC & DNC -18 முதல் 32 , இதர பிரிவினர் 18 முதல் 30 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும். தகுதியுடைய நபர்கள் www.nagapattinam.nic.in என்ற இணையதள முகவரியில் வெளியடப்பட்டுள்ள விபரங்களை அறிந்து விண்ணபத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களின் நகல் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 ஒட்டி அதனை **நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அறை எண் :- 222 நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 30.05.2022, திங்கள் கிழமை அன்று மாலை 5 மணிக்குள் கிடைக்கும்படி செய்யவேண்டும்.** கால தாமதமாக சமாப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றினை அரசு பரீசீலிக்க இயலாது எனவும், அதற்கு மனுதாரரே முழு பொறுப்பு எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நாகப்பட்ழனம் மாவட்டத்தில் வசிக்கும் தகுதியுடையவர்கள் மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் பகுதி நேர துப்புரவாளர் (தொகுப்பூதியம்) பணியிடத்திற்கு விண்ணப்பம் செய்யலாம் என மாவட்ட ஆட்சியர் மரு. அ. அருண்தம்புராஜ், இ.ஆ.ப., இதன் மூலம் கேட்டுக்கொள்கிறார்.

ஓம்/- மரு. அ. அருண்தம்புராஜ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாகப்பட்டினம்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பிவ, மிபிவ கல்வி விடுதிளில் **காலியாக உள்ள பகுதி நேர தூய்மை பணியாளர் (தொகுப்பூதியம்) பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு.**

| வ.எண் | பதவி | காலிபணியடம் | தொகுப்பூதியம் | இனசுழற்சி | |
|---|---|---|---|---|---|
| | | | | Priority | Non - Priority |
| 1. | பகுதி நேர தூய்மை பணியாளர் **(ஆண்)** | 6 (ஆறு) | ரூ.3,000/- (மாதம் ஒன்றுக்கு) | GT -<br>BC -<br>BCM 1<br>MBC/DNC 1<br>SC/ST 1<br>SCA 1 | GT -<br>BC 1<br>BCM -<br>MBC /DNC-1<br>SC/ST -<br>SCA - |

| வ.எண் | பதவி | காலிபணியடம் | தொகுப்பூதியம் | இனசுழற்சி | |
|---|---|---|---|---|---|
| | | | | Priority | Non - Priority |
| 1. | பகுதி நேர தூய்மை பணியாளர் **(பெண்)** | 8 (எட்டு) | ரூ.3,000/- (மாதம் ஒன்றுக்கு) | GT -<br>BC -<br>BCM 1<br>MBC/DNC 1<br>SC/ST 1<br>SCA 1* | GT -<br>BC 1<br>BCM -<br>MBC /DNC-2<br>SC/ST 1<br>SCA - |

*DW - Destitute Widow

Sd/- K. Sankar,
District Backward Classes and
Minorities Welfare Officer,
Nagapattinam

| வ.எண் | விதிமுறைகள் |
|---|---|
| | **காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை** – (ஆண்– , பெண்– )<br>( மாவட்டம்) இன சுழற்சியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் |
| 1 | வயது வரம்பு ( 01.07.2022 அன்றைய நிலவரப்படி)– குறைந்த பட்ச வயது – 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகப்பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) 32 ஆகும். பொதுப்பிரிவினருக்கு 30 ஆகும். விதிமுறைகளுக்குட்பட்டு பி.வ, மி.பி.வ/சீ.ம, மற்றும் அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு வயது வரம்பில் தளர்வு உண்டு. |
| 2 | **தகுதி** – 1. குறைந்தபட்சம் தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். |
| 3 | ஏற்கனவே பணிபுரிந்த அரசுத் துறை /அரசு அலுவலகத்திலிருந்து குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பின் அம்மனுதாரர்களின் மனு நிராகரிக்கப்படும். |
| 4 | I) குற்ற வழக்குகள், நீதி மன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் அரசியலில் பங்கேற்று அதற்கான தண்டனை பெற்றவர் மனு நிராகரிக்கப்படும்.<br><br>II) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10.05.2022 முதல் 30.05.2022 வரை காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br><br>III) 30.05.2022 அன்று மாலை 05.45 மணிக்கு பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் 30.05.2022 அன்று மாலை 5.45க்குள்அலுவலகத்தில் கிடைக்கப்பெற வேண்டும்.<br><br>**IV) விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடம்/முகவரி**<br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>மாவட்டம். |
| 5 | மனுவில் அனைத்து விவரங்களும் உரிய ஆதாரங்களுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முழுமையான விவரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் உரிய ஆதாரங்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |
| 6 | விதிமுறைகளுக்குட்பட்டு நேர்காணலில் தேர்வில் எழுதுதல், படித்தல் உட்பட தகுதி பெறும் விண்ணப்பதாரர்களின் சான்று சரிபார்க்கப்பட்டு இன சுழற்சி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். |
| 7 | விண்ணப்பம் ஏற்கப்பட்ட மனுதாரர்களுக்கு நேர்காணல் மாவட்ட அளவில் நடைபெறும். |
| 8 | முன்னுரிமை இனம் குறிப்பிடப்பட்டுள்ளோர், அதற்கான சான்றின் நகலினை கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். |
| 9 | வயது, சாதி மற்றும் கல்வித் தகுதி ஆகியவற்றிற்கு உரிய சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். |

ஒம்/– XXXXXX

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்,

26.4.2022

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக

26/4/22